சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.291/2023

2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 06-ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.P.பொன்னுத்தாய் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – ராமசாமி என்ற T.R.S.விஜய்ராம் (Pw1) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த வழக்கின் 1 ம் வாதி. வாதிகள் தரப்பு 1வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு 14.02.1970 ம் தேதியிட்ட வாதிகளன் குடும்பத்தினருக்குள் ஏற்பட்ட பதிவு பாகவிஸ்தி ஆவணம் எண். 462/1970 SRO நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துக்கு T.R.சுப்பாராஜ் பெயரில் 943 நிர் பட்டாவாக தாக்கலாகியுள்ள SLR Copy சான்றிடப்பட்ட உண்மை நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.06.2013 ம் தேதியிட்ட T.R.சுப்பாராஜ் அவர்களின் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.06.2013 ம் தேதியிட்ட T.R.சுப்பாராஜ் அவர்களின் வாரிசு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 29.09.1986ம் தேதியிட்ட வீ.வீரப்பநாயக்கர் 7 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு கிரைய

ஆவணம் ஆவண எண்.1760/1986 SRO நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.05.2023 ம்தேதியிட்ட 7 ம் பிரதிவாதியின் பெயரில் மாற்றப்பட்டுள்ள தாவாச் சொத்துக்கான Extract From The Town Survey Land Register கணினி நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.09.11.2023 ம் தேதியிட்ட தாவாச் சொத்துக்கான 01.01.1950 முதல் 31.12.1974 வரையுள்ள காலங்களுக்கான வில்லங்கச் சான்றிதல் SRO நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.09.2023 ம் தேதியிட்ட 01.01.1975 முதல் 22.09.2023 வரையுள்ள காலங்களுக்கான வில்லங்கச் சான்றிதல் கணினி நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.11.2023 ம்தேதியிட்ட அரசு மதிப்பீடு வழிகாட்டி கணினி நகல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2 ம் வாதியின் ஆதார் அட்டை ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.</u>

<u>8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

தாவா சொத்துக்கு பட்டா மாறுதல் செய்ய 8 ம் பிரதிவாதியிடம் எந்தவித மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 29.09.1986 ம் தேதியிட்ட ஆவண எண்.1760/1986 ஆவணத்தை ரத்து செய்யக் கோரி 9 ம் பிரதிவாதியிடம் எந்த வித மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த ஒரு பரிகாரமும் நான் கோரவில்லை என்றால் சரிதான். 8 முதல் 10 பிரதிவாதிகளை பொறுத்து என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

11 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.